**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**STC.No.983/2023**

**PW : 1**

| | | | | |
|---|---|---|---|---|
| **Name** | : பிச்சைமணி | **Caste** | : | |
| **Husband Name** | : குப்புசாமி | **Calling** | : | **LIC** ஊழியர்(ஓய்வு) |
| **Village** | : நத்தம் | **Religion** | : | |
| **Taluk** | : திண்டுக்கல் | **Age** | : | **61/2026** |
| | | **Dated** | : | **19.06.2026** |

**19.06.2026**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 எதிரி கொடுத்த காசோலை என்றால் சரிதான். அ.சா.ஆ.1 ஆன காசோலையில் எழுதியுள்ள 2 Lakhs only என்ற கையெழுத்தும் AD card ல் உள்ள கையெழுத்தும் ஒன்றாக உள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ.3 ஆன ரிட்டன் மெமோவில் காளம் 12ல் signature differs என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ.5 ஆன சட்ட அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டையில் எதிரி கையொப்பம் இல்லை என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. ஆனால் ஒப்புதல் அட்டை திரும்ப வந்தது. எதிரி என்மீது CC.49/2015 வழக்கு தொடுத்து 15 வருடங்கள் பிறகு தான் இந்த வழக்கை நான் கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் 2016ல் வழக்கு பதிந்துவிட்டேன். அ.சா.ஆ.6ல் எதிரி பார்ட்னராகவோ அல்லது ஜாமீன்தாரராகோ கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். CC.49/2015 வழக்கில் எதிரி அனுப்பிய சட்ட அறிவிப்பு அனுப்பிய போது நான் பதில் அறிவிப்பில் இவ்வழக்கின் காசோலை என்னிடம் இருக்கிறது என்ற விவரத்தை குறிப்பிடவில்லை என்றால் அப்போது இந்த காசோலையை என்னிடம் கொடுக்கவில்லை.

அதன்பின்னிட்டு சமரசம் ஏற்பட்ட போது தான் இந்த காசோலையை என்னிடம் கொடுத்தார். சமரச உடன்படிக்கையை யார் எழுதினார் என்றால் கம்யூட்டர் சென்டரில் டைப் செய்தோம். மேற்படி உடன்படிக்கையில் எதிரியின் கையொப்பம் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி உடன்படிக்கையில் சாட்சி கையொப்பம் வாங்கவில்லை என்றால் சரிதான். நான் LIC யின் பணிபுரிவதால் லோன் காரணமாக இந்த காசோலை நான் எதிரியிடம் இருந்துவாங்கினேன் என்றால் சரியல்ல. எதிரி என்மீது தொடுத்த வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக இவ்வழக்கை நான் தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. எதிரி லோன் காரணமாக கொடுத்த வெற்று காசோலையை நான் தவறாக இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் காசோலையில் உள்ள கையொப்பத்தை கையொப்பம் ஆய்விற்கு அனுப்ப ஆட்சியபனை இல்லை என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை</u>**

**இல்லை**

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C

Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.06.19 13:23:00 +0530

Judicial Magistrate No.II
Dindigul.